**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ் இணையக் கல்விக் கழகம்!**






# இடம் பொருள் கலைஞர் 42

# தமிழ் இணையக் கல்விக் கழகம்

## உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலை!

*1999*-ஆம் ஆண்டு பிப்ரவரி. உலகம் தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்த்த முக்கிய நிகழ்வு நடைபெற்றது. **‘தமிழ்நெட்-99’** என்ற தலைப்பில், இரண்டு நாள் தமிழ் இணையம் தொடர்பான மாநாடு சென்னையில் நடைபெற்றது.


உலகம் முழுவதிலும் இருந்து தமிழறிஞர்கள், மென்பொறியாளர்கள், தகவல்தொழில்நுட்ப வல்லுநர்கள் எனப் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கணினியில் தமிழ் விசைப்பலகையைத் தரப்படுத்துதல், பல்லூடக பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அப்போது பேசிய சாம் பிட்ரோடா போன்ற அறிஞர்கள், ‘தமிழைப் பொருளாதார மொழி ஆக்குவதற்கு உலக அங்கீகாரம் வேண்டும். அதனைப் பெற தமிழ், பரவலாகப் பயன்படுத்தக் கூடிய மொழியாக வேண்டும். தமிழ் இணையம் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டால், தமிழ் நிச்சயமாக உலக உபயோக மொழியாக உருவாகும்’ என்று குறிப்பிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து, ‘வருங்காலத்தில் கணிப்பொறியிலும் இணையத்திலும் ஏற்படும் புரட்சிகரமான பலவித வளர்ச்சிகளுக்கு இணையாக, தமிழ் மொழியைச் செயல்படுத்த உள்ள வாய்ப்புகளை நிறைவேற்ற, தீவிர ஆய்வுகளை உடனடியாக உலகளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட தமிழ் இணைய நிறுவனத்தையும், உலகளவில் ஒரு தமிழ் இணைய வகைத் தொடர்பு அமைப்பையும் உருவாக்க வேண்டும்’ என்று முடிவெடுக்கப்பட்டது.

### பரவும் தமிழ், அறிவியல் தமிழ்

அந்தத் திட்டத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கும்விதமாக, அந்த மாநாட்டிலேயே, ‘வெளிநாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயில்வதற்காக ஒரு ‘விர்ச்சுவல் யூனிவர்சிட்டி’யை (மெய்நிகர் பல்கலைக்கழகம்) இணையத்தின் மூலம் துவக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். **‘உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்’** என்று அதற்கு உங்கள் அனுமதியோடு பெயர் சூட்டுகிறேன்’ என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அறிவிப்பு வந்தவுடனேயே ஆக்கப்பணிகள் தொடங்கப்பட்டன. இதன் தோற்றத்துக்கு ஆலோசனைகள் வழங்கிட, அன்றைய தமிழ்நாடு மாநில உயர்கல்விக் குழுத் துணைத் தலைவராக இருந்த முனைவர் மு.அனந்தகிருஷ்ணன் தலைமையில், 1999-ஆம் ஆண்டு மார்ச் 5 அன்று ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அதே ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்துக்காக WWW. tamilvirtualuniv.org என்ற இணைய தளப் பெயர் பதிவு செய்யப்பட்டது.



அதைத் தொடர்ந்து, உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, அந்தப் பணியை அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் வ.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில், செப்டம்பர் 6 அன்று ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தது, கழக அரசு.

ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களும் மேற்கண்ட குழுக்களுடன் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டு ‘தமிழ் பரவுவது மாத்திரமல்ல, அது அறிவியல் தமிழாகவும் இருக்க வேண்டும்’ என்று வலியுறுத்தினார்.

### தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்

தொடர்ந்து 2001-ஆம் ஆண்டு பிப்ரவரி 17 அன்று, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அப்போது பேசிய கலைஞர், “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்” என்ற இந்த வாசகத்தை நாங்கள் எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடுவது வழக்கம். ஆனால், இதிலே ஒரு வேறுபாடு, சொன்னதைச் செய்வோம் என்பது மாத்திரமல்ல. சொல்லாததையும் செய்திருக்கிறோம். தேர்தல் அறிக்கையிலே சொல்லப்படாததையும் செய்திருக்கிறோம். அதுதான் இந்தப் பல்கலைக் கழகம்” என்றார்.

அந்த சமயத்தில், தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 6 கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் இருந்தனர். இலங்கை, மலேசியா, ரீயூனியன், இங்கிலாந்து, ஆப்பிரிக்கா, பர்மா, சிங்கப்பூர், கனடா, ஃபிரான்ஸ், மொரீசியஸ், ஆஸ்திரேலியா, வளைகுடா நாடுகள், கயானா, ஃபிஜி தீவு, செஷல்ஸ் உள்ளிட்ட இதர நாடுகளில் இருந்த தமிழர்களின் எண்ணிக்கை சுமார் 1 கோடிக்கும் அதிகமாக இருந்தது. எனவே இது, **‘உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்’** என்று பெயர் பெற்றிருப்பதைவிட, அதற்குள்ள பொருள் என்னவென்றால், உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்’ என்றார் கலைஞர்.

### எச்சமாக நின்று வாழும்!

கலைஞர் மேலும் தன் உரையில், “இன்று விஞ்ஞான உலகத்திலே இந்த சாஃப்ட்வேருக்கு, கம்ப்யூட்டருக்கு, இந்த இணையத்திற்கு ஒரு தலையாய இடம் ஏற்பட்டுவிட்டது. அந்தத் தலையாய இடத்தை இந்தியாவைப் பொறுத்தவரையில் இப்போது தமிழகம்தான் பெற்றிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். வேறு எந்த மாநிலத்திலும் தமிழகத்திலே வளர்ந்துள்ள அளவிற்கு இந்தத் தொழில்நுட்பம் வளரவில்லை.

எனக்குப் பெருமகிழ்ச்சி என்னவென்றால், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலை மாத்திரம் வளர்க்கவில்லை, தமிழையும் வளர்க்கிறோமே என்பதுதான். **வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்** என்பது நான் அடிக்கடி சொல்லி வருகின்ற சூளுரை. அந்த சூளுரைக்கேற்ப, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நமக்கெல்லாம் எச்சமாக நின்று வாழ்க!” என்று வாழ்த்தினார்.

சென்னை, கோட்டூர்புரம் காந்தி மண்டப சாலையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆகியவற்றுக்கு அருகில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது ‘தமிழ் இணையக் கல்விக் கழகம்’ என்ற பெயரில் இந்தப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கும், தமிழ் மொழியைக் கற்க விரும்பும் இதர மொழியினருக்கும் மழலைக் கல்வி, சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், பட்டம் எனப் பல கட்டமாகத் தமிழ் மொழி இணையம் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

***கலைஞர் வாழ்கிறார்... தமிழ் வளர்கிறது..!***

**...வலம் வருவோம்**

தற்போது இந்தத் தமிழ் இணையக் கல்விக் கழகம் www.tamilvu.org என்ற இணையதளப் பெயரில் இயங்கி வருகிறது. இதில் தமிழின் செவ்விலக்கியங்கள், தமிழ் இலக்கண விதிகள், தமிழ் இணைச்சொல் அகராதி, பிழை திருத்தும் வசதி, மின் அஞ்சல், கையெழுத்து உணர்தல், ஒலி உணர்தல், எழுத்துரு உணர்தல், ஓலைச்சுவடிகளை அறிதல் போன்ற பல வசதிகள் உள்ளன.

மேலும், tamildigitallibrary.in என்ற தளத்தில் அற்புதமான மின்னூலகம் ஒன்றையும் தமிழ் இணையக் கல்விக் கழகம் நடத்தி வருகிறது. இங்கு அரிய தமிழ், ஆங்கில நூல்கள், பருவ இதழ்கள், கீழடி உள்ளிட்ட தொல்லியல் அகழாய்வு தொடர்பான தகவல்கள் போன்ற பல தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றை எந்தக் கட்டணமும் இல்லாமல் பயன்படுத்த முடியும் என்பது கூடுதல் சிறப்பு.

## வாசிப்புப் பழக்கம் உருவாக்குவோம்!




**மா**ணவர்களிடம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது வாசிப்புப் பழக்கம். மீண்டும் அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதை எப்படியெல்லாம் செய்யலாம், மக்களிடம் எப்படிப் பேரியக்கமாகக் கொண்டுச் செல்லலாம் என்பதற்கு வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது **‘வாசிப்புப் பேரியக்கம்’** என்கிற இந்தச் சிறுநூல்.

குழந்தைகளுக்கான சிறார் படைப்புகளைத் தொடர்ந்து எழுதிவரும் விழியன் மற்றும் விஷ்ணுபுரம் சரவணன் ஆகியோர் கூட்டாக எழுதியுள்ள இந்நூலினை ’புக்ஸ் ஃபார் சில்ட்ரன்ஸ்’ வெளியிட்டுள்ளது.

செய்தித்தாள் வாசிப்பது, நூலகம் பயன்படுத்துவது என பாடநூல்களைத் தாண்டி அவர்களைப் பண்படுத்துவதற்கான முன்வரைவாக இந்த நூலினைப் பார்க்க முடிகிறது. மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களும், வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என முயலும் சமூக ஆர்வலர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல். அனைவரிடமும் சென்று சேர வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



## பெரியாரின் காதுகுத்து!



வீரமணி

**எ**ன் தந்தை திராவிடர் கழகத்தில் மாவட்ட அளவிலான பொறுப்பிலிருந்தவர். அதனாலேயே எங்கள் குடும்பத்தில் நடக்கும் அனைத்து விழாக்களுக்கும் பெரியாரை அழைப்பது வழக்கமாக இருந்தது. என் சகோதரிகளுக்கும் எனக்கும் தமிழரசி, பெண்ணரசி, மங்கையற்கரசி, கலையரசி, வீரமணி என்று தந்தை பெரியார்தான் பெயர் வைத்தார். 1960-ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று உசிலம்பட்டியில் நடைபெற்ற காதணி விழாவில், என் அக்காக்கள் தமிழரசி, பெண்ணரசி இருவருக்கும் தந்தை பெரியார் மடியில் வைத்து, காது குத்தினார்கள். அப்போது பெரியார் என் தந்தை திருமால் அவர்களிடம், ‘நிறைய செலவு செய்து விழா எடுக்கிறாய், நான் வந்து சென்றதுக்கு, நீ அவசியம் நன்கொடை வழங்க வேண்டும்’ என்று சொன்னாராம்.

**-தி.வீரமணி, கிளைக் கழகப் பிரதிநிதி,
மணப்பாறை, திருச்சி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தேர்தல் பிரச்சார உத்திகள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலின்போது கழகத்தின் பிரச்சார முறையும், சுவரொட்டிகளும் மக்களை ஈர்த்தன. கழகத்தின் ‘போஸ்டர்’ பிரச்சாரத்துக்கு முன்னால் வேறு கட்சிகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. இந்தப் பிரச்சார முறைகள், அப்போது இருந்த மற்ற கட்சிகளைக் காட்டிலும், கழகத்தின் மீதும், பேரறிஞர் அண்ணாவின் மீதும் மக்களுக்கு நம்பிக்கைக் கீற்று ஏற்பட வழி செய்தன. அப்போது 15 இடங்களில் வெற்றிபெற்று இருந்தாலும், 30 இடங்களில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் கழகம் தோல்வி கண்டிருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 288




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131